දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.
ඇමතිතුමා / அமைச்சர் / Minister } 2784832 2784807 2785617
ලේකම් / செயலாளர் / Secretary } 2784812
කාර්යාලය / அலுவலகம் / Office } 2785141-50 Fax: 2784846
විද්‍යුත් තැපෑල/மின்னஞ்சல்/E-mail : isurupaya@moe.gov.lk

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education
'ඉසුරුපාය'
බත්තරමුල්ල.
"இசுருபாய"
பத்தரமுல்ல.
"Isurupaya"
Battaramulla.

ඔබේ අංකය / உமது இல. / Your No. } ..............................

මගේ අංකය / எனது இல. / My No. } ED/01/12/06/05/01

දිනය / திகதி / Date } 2017.08.31

சுற்றறிக்கை இல. - 33/2017

சகல மாகாண மாகாணச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல கோட்டங்களிற்குப் பொறுப்பான பிரதி/உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல பிரிவெனாக்களுக்குப் பொறுப்பான மதகுருமார்கள்,
சகல அரசாங்க மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளினது அதிபர்கள் ஆகியோருக்கு,

## பாடசாலைத் தவணை அட்டவணை - 2018

01. 2018 ஆம் ஆண்டில் பின்பற்றப்பட வேண்டிய பாடசாலைத் தவணை அட்டவணை மற்றும் அது தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

### 1. சிங்கள மற்றும் தமிழ் பாடசாலைகளுக்கானது

| | |
|---|---|
| முதலாம் தவணை | 2018 ஜனவரி மாதம் 02 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் 2018 ஏப்ரல் மாதம் 06 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை (இவ்விரு தினங்களும் உட்பட) |
| இரண்டாம் தவணை | 2018 ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 2018 ஓகஸ்ட் மாதம் 03 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை (இவ்விரு தினங்களும் உட்பட) |
| மூன்றாம் தவணை | 2018 செப்ரெம்பர் மாதம் 05 ஆம் திகதி புதன்கிழமை முதல் 2018 டிசம்பர் மாதம் 07 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை (இவ்விரு தினங்களும் உட்பட) |

### 2. முஸ்லிம் பாடசாலைகளுக்கானது

| | |
|---|---|
| முதலாம் தவணை | 2018 ஜனவரி மாதம் 02 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் 2018 ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி புதன்கிழமை வரை (இவ்விரு தினங்களும் உட்பட) |
| இரண்டாம் தவணை | முதற் கட்டம்<br>2018 ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதி புதன்கிழமை முதல் 2018 மே மாதம் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை (இவ்விரு தினங்களும் உட்பட) |
| | (றமழான் மாத நோன்புக்காக 2018.05.12 முதல் 2018.06.17 வரை விடுமுறை வழங்கப்படும்) |
| | இரண்டாம் கட்டம்<br>2018 ஜுன் மாதம் 18 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 2018 ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை (இவ்விரு தினங்களும் உட்பட) |
| மூன்றாம் தவணை | 2018 ஓகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 2018 டிசம்பர் மாதம் 07 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை (இவ்விரு தினங்களும் உட்பட) |

தய. மறுபக்கம் பார்க்க

02. அந்தந்த மாகாணக் கல்வி அமைச்சுக்கள் தத்தமது மாகாணங்களுக்குரிய விசேட நிலைமைகளுக்கு ஏற்ப பாடசாலைத் தவணை அட்டவணையில் ஏதேனும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் எனக் கருதின், பின்வரும் நிபந்தனைகளுக்கு ஏற்பவும் 1997 ஒகஸ்ட் மாதம் 08 ஆம் திகதிய 97/15 இலக்க சுற்றறிக்கைக்கு ஏற்பவும் இத் தவணை அட்டவணையை மாற்றி அமைக்க முடியும்.

2.1 பாடசாலைத் தவணை அட்டவணை தொடர்பில் வெளியிடப்பட்ட 97/15 இலக்க சுற்றறிக்கைக்கு ஏற்ப இலங்கையிலுள்ள சகல பாடசாலைகளும் வருடத்திற்கு 210 நாட்கள் நடாத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள போதும், 2018 ஆம் ஆண்டில் அமையும் அரசாங்க விடுமுறை நாட்களை கருத்தில் கொண்டு குறிப்பிட்டவாறு 210 நாட்கள் பாடசாலைகளை நடாத்துவதற்கு முடியாதுள்ளது. எனவே 2018 ஆம் ஆண்டில் அரசாங்க மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற சகல தனியார் பாடசாலைகள் மற்றும் அனுமதிக்கப்பட்ட பிரிவேனாக்கள் யாவும் 197 நாட்கள் நடாத்தப்பட வேண்டும் என்பதை கருத்திற் கொள்ளவும்.

2.2 2018 ஆம் ஆண்டு க.பொ.த.(உ.தர) பரீட்சை ஒகஸ்ட் மாதத்திலும் க.பொ.த.(சா.தர) பரீட்சை டிசம்பர் மாதத்திலும் நடாத்தப்படவுள்ளமையினால், பாடசாலைகளில் ஒகஸ்ட் மற்றும் டிசம்பர் விடுமுறைக் காலங்கள் இத் தவணை அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறே அமைதல் வேண்டும்.

03. அரசினால் வெளியிடப்பட்டுள்ள விசேட விடுமுறை நாட்கள், சனி, ஞாயிறு தினங்கள் மற்றும் தவணை விடுமுறை நாட்கள் போன்ற காலங்களில் சகல பாடசாலைகளும் மூடப்பட வேண்டும். எனினும், விசேட காரணங்களுக்காக பாடசாலை நடாத்தப்பட வேண்டிய தினத்தில் பாடசாலையை மூட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படின் அந் தினத்திற்காக பதில் நாள் பாடசாலை நடாத்தப்படுதல் வேண்டும்.

04. 2018 ஆம் ஆண்டுக்குரிய அரச விடுமுறை நாட்காட்டி இத்துடன் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதோடு (இணைப்பு 01) பாடசாலைச் செயற்பாடுகள் உள்ளடங்கிய நாட்காட்டி இனிவரும் காலத்தில் அச்சிடப்பட்ட தவணைக் குறிப்புப் புத்தகத்தோடு தங்களுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இத் தவணை அட்டவணையை நடைமுறைப்படுத்துகையில் யாதாயினும் சிக்கல்கள் ஏற்படின் அது தொடர்பாக பாடசாலைச் செயற்பாடுகள் கிளையின் கல்விப் பணிப்பாளரிடம் வினவுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தொலைபேசி இலக்கம் : 011-2784845

சுனில் ஹெட்டிஆரச்சி
செயலாளர்
கல்வி அமைச்சு.

பிரதிகள் :

1. பணிப்பாளர் நாயகம் (தேசிய கல்வி நிறுவகம்)
2. பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்
3. கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
4. பிரதம ஆணையாளர் - கல்வியியல் கல்லூரிக் கிளை
5. கல்வி அமைச்சின் பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் கிளைத் தலைவர்கள்
6. பொது முகாமையாளர், இலங்கை புகையிரதத் திணைக்களம்
7. தலைவர், மத்திய போக்குவரத்துச் சபை

இணைப்பு - 1

## அரசாங்க விடுமுறை தினங்கள் - 2018

| | | | | |
|---|---|---|---|---|
| ஜனவரி | 01 | திங்கட்கிழமை | துருது முழு நோன்மதி தினம் | *= |
| ஜனவரி | 14 | ஞாயிற்றுக்கிழமை | தைப்பொங்கல் தினம் | *= |
| ஜனவரி | 31 | புதன் கிழமை | நவம் முழு நோன்மதி தினம் | *= |
| பெப்ரவரி | 04 | ஞாயிற்றுக்கிழமை | தேசிய சுதந்திர தினம் | *= |
| பெப்ரவரி | 13 | செவ்வாய்க்கிழமை | மகா சிவராத்திரி தினம் | *= |
| மார்ச் | 01 | வியாழக்கிழமை | மெதின் முழு நோன்மதி தினம் | *= |
| மார்ச் | 30 | வெள்ளிக்கிழமை | பெரிய வெள்ளிக்கிழமை தினம் | *= |
| மார்ச் | 31 | சனிக்கிழமை | பக் முழு நோன்மதி தினம் | *= |
| ஏப்ரல் | 13 | வெள்ளிக்கிழமை | சிங்கள/தமிழ் புத்தாண்டு தினத்திற்கு முந்திய தினம் | *= |
| ஏப்ரல் | 14 | சனிக்கிழமை | சிங்கள/தமிழ் புத்தாண்டு தினம் | *= |
| ஏப்ரல் | 29 | ஞாயிற்றுக்கிழமை | வெசாக் முழு நோன்மதி தினம் | *= |
| ஏப்ரல் | 30 | திங்கட்கிழமை | வெசாக் முழு நோன்மதி தினத்திற்கு பிந்திய தினம் | *= |
| மே | 01 | செவ்வாய்க்கிழமை | உலக தொழிலாளர் தினம் | *= |
| மே | 29 | செவ்வாய்க்கிழமை | அதி பொசன் முழு நோன்மதி தினம் | *= |
| ஜூன் | 15 | வெள்ளிக்கிழமை | ஈதுல்-பித்ர் (ரமழான் பெருநாள் தினம்) | *= |
| ஜூன் | 27 | புதன் கிழமை | பொசன் முழு நோன்மதி தினம் | *= |
| ஜூலை | 27 | வெள்ளிக்கிழமை | எசல முழு நோன்மதி தினம் | *= |
| ஓகஸ்ட் | 22 | புதன் கிழமை | ஈதுல் அல்ஹா (ஹஜ்ஜுப் பெருநாள் தினம்) | *= |
| ஓகஸ்ட் | 25 | சனிக்கிழமை | நிகினி முழு நோன்மதி தினம் | *= |
| செப்ரெம்பர் | 24 | திங்கட்கிழமை | பினர முழு நோன்மதி தினம் | *= |
| ஒக்ரோபர் | 24 | புதன் கிழமை | வப் முழு நோன்மதி தினம் | *= |
| நொவம்பர் | 06 | செவ்வாய்க்கிழமை | தீபாவளி திருநாள் தினம் | *= |
| நொவம்பர் | 20 | செவ்வாய்க்கிழமை | (மீலாதுன் நபி) நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிறந்த தினம் | *= |
| நொவம்பர் | 22 | வியாழக்கிழமை | இல் முழு நோன்மதி தினம் | *= |
| டிசம்பர் | 22 | சனிக்கிழமை | உதுவப் முழு நோன்மதி தினம் | *= |
| டிசம்பர் | 25 | செவ்வாய்க்கிழமை | நத்தார் தினம் | *= |

* அரசாங்க விடுமுறை தினம் = வங்கி விடுமுறை தினம்